# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (04.11.2015 முதல் 08.11.2015)

**அறிக்கை எண் 862015** **தேதி: 03.11.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 34°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 21°செ முதல் 26°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 15°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் பல இடங்களில் இலேசானது முதல் மிதமான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (04.11.2015 முதல் 08.11.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 88 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 82 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 04.11.15 | 20 | 31 | 24 | 7 | 88 | 82 | 8 | வடகிழக்கு |
| 05.11.15 | 20 | 31 | 24 | 7 | 87 | 81 | 8 | வடகிழக்கு |
| 06.11.15 | 10 | 31 | 24 | 7 | 84 | 78 | 8 | வடகிழக்கு |
| 07.11.15 | 14 | 31 | 24 | 7 | 85 | 80 | 8 | வடகிழக்கு |
| 08.11.15 | 16 | 31 | 24 | 7 | 86 | 80 | 8 | வடகிழக்கு |

## வேளாண் அறிவுரை

- ✓ கடந்த மற்றும் நடப்பு வாரங்களில் அதிக மழை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் குளிர்கால இறவை கம்போடியா பருத்தியில் தயிர்நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த 250 கிராம் கார்பன்டசிம் மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து 1 எக்டருக்கு தெளிக்கவும்.
- ✓ அதிக வெப்ப நிலை மற்றும் மழையின் காரணமாக சம்பா பருவத்தில் நடவு செய்துள்ள நெல்லில் துத்தநாக குறைபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய 0.5 சதவீதம் துத்தநாக சல்பேட் மற்றும் 1 சதவீத யூரியா கரைசலை இரு முறை 10 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.
- ✓ தொடர்ந்து ஈரப்பதமான சூழ்நிலை நிலவுவதால் கால்நடை மற்றும் கோழி தீவனங்களில் பூஞ்சாண தாக்குதல் ஏற்படுவதால் வாந்தி மற்றும் பேதி ஏற்பட வாய்ப்புள்ளது. இதை தடுக்க தீவனங்களை உலர்த்தி பயன்படுத்தவும்.

## குறுஞ்செய்தி

- ✓ கடந்த மற்றும் நடப்பு வாரங்களில் அதிக மழை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதால் குளிர்கால இறவை கம்போடியா பருத்தியில் தயிர்நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த 250 கிராம் கார்பன்டசிம் மருந்தினை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து 1 எக்டருக்கு தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.